# அறிவித்தல்

## மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு
## கிழக்கு மாகாணம்

**கிழக்கு மாகாண, மாகாணப் பாடசாலைகளில் நிலவுகின்ற சிங்கள மற்றும் தமிழ் மொழிமூல ஆசிரியர் வெற்றிடங்களுக்காக இலங்கை ஆசிரியர் சேவை 3-I(அ) தரத்துக்கு பட்டதாரிகளை ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப்பரீட்சை – 2024**

மேற்குறிப்பிட்ட விடயம் தொடர்பாக என்னால் 22.03.2024ம் திகதிய ‘‘தினமின’’ மற்றும் ‘‘தினகரன்’’ பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தல் மற்றும் கிழக்கு மாகாண சபையின் இணையதள முகவரியில் வெளியிடப்பட்ட அறிவித்தல் சம்பந்தமாக.

அதற்கமைய உரிய அறிவித்தலில் ‘‘இணைப்பு 1’’ இல் ‘‘பாட இலக்கம் 1’’ இற்கு உரியதாக கீழ்வரும் திருத்தம் மேற்கொள்ளப்படுகின்றது என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

**திருத்தம்**

| பாட எண் | மொழி மூலம் | பாடம் | கல்வித்தகைமைகள் |
|---|---|---|---|
| 01 | **சிங்களம் மற்றும் தமிழ்** | ஆரம்பக்கல்வி (Primary) | மொத்த கற்றல் காலப்பிரிவில் சிங்களம்/ தமிழ் பாடத்தினை பிரதான பாடமாக கற்றுள்ள (விசேட / பொது) கலைமாணிப் பட்டம்<br>அல்லது<br>கலைப்பாடத்துறையில் (விசேட / பொது) பட்டத்துடன் கல்விப் பொதுத் தராதர உயர்தர பிரிவில் சிங்களம்/ தமிழ் பாடத்தில் சித்தியடைந்திருத்தல். |

அவ்வாறே இந்த பத்திரிகை அறிவித்தலுக்கமைவாக ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படுவது, 15.08.2023ம் திகதிய அமைச்சரவை விஞ்ஞாபன இலக்கம் : අමප/23/1537/607/124 மற்றும் 04.09.2023ம் திகதிய அமைச்சரவை தீர்மானத்திற்கமைய ஓய்வு பெறுதல், இராஜினாமா செய்தல், சேவையை விட்டு விலகுதல் ஆகிய காரணங்களால் ஏற்பட்ட வெற்றிடங்களுக்காக மட்டும் என்பதோடு அந்த வெற்றிட எண்ணிக்கை கிழக்கு மாகாணத்தின் முழு ஆசிரிய வெற்றிட எண்ணிக்கை இல்லை என்பதையும் இத்தால் அறியத்தருகின்றேன்.

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதி **15.04.2024**ம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது என்பதனையும் மேலும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அவ்வாறே கிழக்கு மாகாண சபையின் இணையதளத்தில் வெளியிடப்பட்டிருந்த ஆட்சேர்ப்பு அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட ஏனைய நிபந்தனைகள் அவ்வாறே வலுவிலிருக்கும்.

**ஆ. மன்சூர்,**
செயலாளர்,
மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு,
கிழக்கு மாகாணம்,

**02.04.2024**